திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் நிலத்தடி நீர் அதிகமாக குறைந்து இருக்கிற காரணத்தால் ஏற்கெனவே பல நூற்றுக் கணக்கான ஆழ் குழாய் கிணறுகள் வறண்டு இருக்கின்றன. அவைகளை மேலும் ஆழப்படுத்த துரிதமாக அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வந்து இருந்தாலும் போதிய உபகரணங்கள் இல்லாமல் அவர்கள் வேலையை பூர்த்தி செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, உடனடியாக அரசு தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அத்தனை ஆழ்துளைக் கிணறுகளுக்கும் உரிய உபகரணங்களை வழங்க துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தகுந்த அறிவுரைகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 435, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை, அமைச்சர்.

435—

நெகமம் பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றல்

*10150—திரு. நா. சா. பழனிசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

கிணத்துக்கடவு தொகுதி பெரிய நெகமம் பேரூராட்சிக்குப் போதிய வருமானம இல்லாததால் அதை ஊராட்சியாக மாற்ற அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம் பெரிய நெகமம் முதல்நிலை பேரூராட்சியை ஊராட்சியாக வகைமாற்றம் செய்வதற்கான சாத்தியம் இல்லை.

1993 ஏப்ரல் 22]

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே இருக்கின்ற பெரிய நெகமம் பேரூராட்சியை ஊராட்சியாக மாற்ற வேண்டுமென்ற ஒரு அவசியத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். பெரும்பாலும் ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்றவேண்டுமென்ற கோரிக்கைகள்தான் சட்டமன்றத்திலே வைக்கப்படும். ஆனால் ஒரு பேரூராட்சியை ஊராட்சியாக மாற்ற வேண்டிய ஒரு கோரிக்கையை நான் இங்கே வைக்கின்றேன் என்றால் அந்தப் பேரூராட்சியின் வருமானம், இன்று அங்கே இருக்கின்ற பேரூராட்சி அலுவலர்களுக்குச் சம்பளம் கொடுக்கக் கூடிய அளவுக்குக் கூடப் போதுமானதாக இல்லை. குடிநீர் கூட இரண்டு நாள், 3 நாள் என்று விடப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. ஏனென்றால், மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்கு நிதி வசதி அந்தப் பேரூராட்சிக்கு இல்லாமல் இருக்கிறது. அந்தப் பேரூராட்சியின், வீட்டு வரி, தொழில் வரி போன்ற வரிகள் வசூலிக்கப்படாமல் மிகவும் நீண்ட காலமாக நிலுவையில் இருக்கிறது. கிட்டத்தட்ட 73,000 ரூபாய் அளவுக்கு வீட்டுவரியே வசூலிக்கப்படாமல் இருக்கிறது. இப்படியெல்லாமம் இருக்கின்ற நிலையில், ஒரு பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றினால் ஒன்றியப் பொது நிதியிலிருந்தாவது அந்தப் பேரூராட்சிக்குப் பணிகள் நடக்கும், எனவே, அந்த பெரிய நெகமம் பேரூராட்சியை, ஒன்று அது தனியாகச் செயல்படுகின்ற அளவுக்கு நிதி ஆதாரத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், அல்லது பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சியின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு வழிவகைகள் காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அந்தப் பேரூராட்சியிலே, முன்பு இருந்த பேரூராட்சியின் செயல் அலுவலர் 5 ஆயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள வீடுகளுக்கு எல்லாம் 50 ஆயிரம், 1 இலட்சம், 2 இலட்சம் என்று மதிப்பீடுகளைப் போட்டுக் கொடுத்து, அந்த வீடுகளை எடுகட்டி சாரயக் கடை, கள்ளுக் கடை எடுத்தவர்கள் அந்தக் கடைக்குப் பணமும் கொடுக்கவில்லை. ஆயத் தீர்வையும் கொடுக்கவில்லை. இதனால் அந்த வீட்டு வரி, அந்த வீடுகளின் மதிப்புக்கு உயர்த்தப்

பட்டதனால், சாதாரணமாக வீட்டுவரி 10 ரூபாய்; 20 ரூபாய் என்று இருந்தது இப்போது 100 ரூபாய், 200 ரூபாய் 500 ரூபாய் எனக் கூட்டப்பட்டிருக்கிறது. 5,000 ரூபாய் பெறுமானமுள்ள வீட்டுக்கு 500 என வீட்டுவரி உயர்த்தப் பட்டிருக்கிறது என்பது, அதை முன்பு இருந்த ஆட்சிக் காலத்தில் சில நபர்கள் தவறுதலாகப் பயன்படுத்தியிருக் கிறார்கள். அவர்களிடமிருந்து அந்த வீட்டு வரியை வசூலிப் பதற்கு அரசு நடவடிககை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றித் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நெகமம் பேரூராட்சியைப் போன்றுதான், கோவை பேரூர் தொகுதியில் உள்ள திருமலைபாளையம் பேரூராட்சியும் இருக்கிறது. நான் சொல்லிக் கொள்வது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, நெகமத்தைப் பற்றியது.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சியில் பணம் இல்லை என்றாலும், வருமானம் உள்ள பெரிய பேரூராட்சியிலிருந்து பணத்தை எடுத்து, வருமானம் இல்லாத பேரூராட்சிகளுக்குச் செலவு செய்தாகிலும், விளக்கு வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகளைச் செய்துதர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொளகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 436, திரு. கோ. காளன், இருக்கையில் இல்லை.

வினா எண். 437, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர.